# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 3340/D/2019 & SA 3441/D/2019**

திரு. N. ஆறுமுகம் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,
பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி, --- பொது அதிகார அமைப்பு
கோயம்புத்தூர் மாவட்டம்.

பார்வை:

| | SA 3340/D/2019 | SA 3441/D/2019 |
|---|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 14.12.2018 | 10.12.2018 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 10.01.2019 | 10.01.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 01.02.2019 | 01.02.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.04.2019 | 11.04.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திரு. கதிரவமூர்த்தி, செயல் அலுவலர், பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுக்களில், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட ஜோதிபுரம் 1வது வார்டு, ஆரம்பப்பள்ளி பின்புறம் உள்ள 1வது வீதி தொடர்பாக புகார்

அளிக்கப்பட்டிருப்பின் அவற்றின் நகல், இச்சாலை குறித்து பேரூராட்சியின் வாயிலாக தீர்மான நகல் போடப்பட்டிருப்பின் அவற்றின் நகல், இச்சாலையை வடிவமைத்த பொறியாளரின் முழு விவரம், இது தொடர்பாக ஒப்பந்தப்புள்ளியில் எத்தனை ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர் என்ற முழு விவரம், இச்சாலையில் மழைநீர் வடிகால் குறித்து ஒதுக்கப்பட்ட நிதி விவரம் மற்றும் இவை எங்கிருந்து தொடங்கப்பட்டு எந்த இடத்தில் முடிவடைகிறது என்ற விவரம் உள்ளிட்ட விவரங்களை ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் **ஒரே பொருள் குறித்து** தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (04.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் மனுவில் கோரிய தகவல்களான பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்கு உட்பட்ட ஜோதிபுரம் 1வது வார்டு, ஆரம்பப்பள்ளி பின்புறம் உள்ள 1வது வீதி தொடர்பாகவும், இவ்வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கப்படாமல், அவரது வீட்டின் முன்பு தண்ணீர் (மழைநீர்) தேங்கி இருப்பதாகவும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார் என்றும், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக, முடிந்தவரை அவரது வீட்டின் முன்பு மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை மனுதாரருக்கு தகவல்களாக வழங்கப்பட்டதாகவும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், மனுதாரர் கோரிய பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்பட்டதை கருத்தில் கொண்டு, மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானவை என்று முடிவு செய்து, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 3340/D/2019 & SA 3441/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,
பெரியநாயக்கன் பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு. N. ஆறுமுகம்,
ப.எண்.1/19, பு.எண்.1/269,
ஜோதிபுரம் முதல் தெரு,
ஆரம்பப்பள்ளி பின்புறம், ஜோதிபுரம்,
கோயமுத்தூர் - 641 047.

Copy to: SA 3340/D/2019 & SA 3441/D/2019
SNPA 06.11.2020